# மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டமும் வாழ்வாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட மாற்றமும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் கிராமம் பற்றிய சிறப்பு பார்வை

*கல்யாணி.ந சுபாஜினி.உ*

*புவியியற்றுறை கலைப் பீடம்*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

**ஆய்வுச் சுருக்கம்**

*வாழ்வாதாரம் என்பது மக்களையும்அவர்களது வல்லமைகள் உணவு வருமானம் சொத்துக்கள் உட்பட அவர்கள் வாழும் வழிகளையும் உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில் மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகவும் வாழ்வாதாரத்தின் விருத்திக்கு அடிப் படையாகவும் வாழிடம் காணப்படுகின்றது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டமானது யுத்தத்தின் பல்வேறு அழிவுகளுக்கு உட்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றது. யுத்தம் முடிவடைந்த பின்னர் பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் வீடமைப்புத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவகையில் இந்தியன் வீட்டுத்திட்டத்தினால் தேவிபுரக் கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட வாழிடங்களினால் அம்மக்களது வாழ்வா தாரத்தில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுஎன்பதை மதிப்பீடு செய்துகொள்வதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது வழங்கப்பட்ட இவ் வீடமைப்புத்திட்டம் சரியான இலக்குப்பிரிவினரைச் சென்றடைந்துள்ளதா? மீள்குடியேற்றத்தின் பின்னர் வீடமைப்புத்திட்டத்தினால் அம்மக்களது வாழ்வாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? இவ் வீடமைப்புத்திட்டம் மக்களது தேவையை எந்தளவிற்கு பூர்த்தி செய்துள்ளது? என்பவற்றை அறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கான தரவுகளும் தகவல்களும் முதலாம்நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்புமுறைகளுக்கூடாக சேகரிக்கப்பட்டது. முதலாம் நிலைத்தரவுகள் நேர்காணல் அவதானம் வினாக்கொத்துமூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் பிரதேச செயலகஅறிக்கை கிராம சேவையாளர் அறிக்கை மூலமும்பெறப்பட்டன. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைக்கூடாக பெறப்பட்ட தரவுகள்விபரணப்பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவுகள் கணிதவியல் நுட்பமுறை மூலம்செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு விபரணப் பகுப்பாய்வுமுறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள்பெறப்பட்டன. முடிவுகளின்மூலம் வீடமைப்புத்திட்டத்தின்இலக்குப்பிரிவினர்இபயனாளிகள் தெரிவுத்தன்மையில்முற்றுமுழுதான உண்மைத்தன்மை காணப்படாதநிலையையும் இக்கிராமமானது வீடமைப்புத்திட்டம்வழங்கப்பட முன்னர் பொருளாதார ரீதியில் விருத்திபெற்றிருந்தாலும் பௌதிக உட்கட்டமைப்பு மற்றும் சமூகஉட்கட்டமைப்பில் பின்னடைவான நிலையிலேயேகாணப்பட்டது.எனினும் தற்காலத்தில் முன்னரை விடபௌதிக உட்கட்டமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பில்விருத்தியடைந்துள்ள போதிலும் பொருளாதார ரீதியில்பின்னடைவான நிலையிலேயே காணப்படுகின்றது.அதாவது இவ்வீடமைப்புத்திட்டம் மக்களை கடனாளிகளாகவும் ஏழைகளாகவும் மாற்றியுள்ளது. வசதிபடைத்தவர்களுக்கு இவ்வீட்டுத்திட்டம் ஒரு வாய்ப்பாகஅமைந்தபோதும் வறியவர்களுக்கு ஓர் சுமையாகவேஉள்ளது. இதனால் இவ்வீட்டுத்திட்டம் எல்லா மக்களுக்கும்பூரண திருப்தியளிக்கவில்லை என்பதே இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவாக உள்ளது. பெறப்பட்ட முடிவுகளினை அடிப்படையாகக் கொண்டு கிராமத்தின் விருத்திக்காக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்-** *வீட்டுத்திட்டம் வாழ்வாதாரம் அபிவிருத்தி*